1992 ஏப்ரல் 28]

(இ) கமுதி தொகுதியில் கல்லூரி மாணவர்கள்மீது போடப்பட்டுள்ள வழக்கை வாபஸ்பெற வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் 24 ஆம் தேதி அவருடைய தொகுதியிலே நடந்த ஒரு துப்பாக்கிச் சூடு பற்றிய பிரச்சனையைக் கொடுத்திருக்கிறார்கள். அன்றையதினம் வேறு பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டு அவையின் நேரம் நெடுநேரம் ஆகிய காரணத்தினாலே அதை எடுத்துக் கொள்ளமுடியவில்லை. அது தொடர்ந்து வருகிறபோது, அன்று வேறு பிரச்சினை இருந்ததால், அந்தப் பிரச்சினையில் அந்த அளவுக்கு அவ்வளவு பதட்டம் இல்லை என்கின்ற காரணத்தினால் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. (குறுக்கீடு) திரு. ஆர். சிங்காரம் அவர்களும் இந்தப்பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கத்தின் கவனத்திற்கு மட்டும் இதை நீங்கள் கொண்டுவரலாம். திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, என்னுடைய தொகுதியான கமுதியில், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி மாணவர்களுக்கும் இங்கே இருக்கின்ற நம்முடைய எம்.பி.டி.சி. பஸ் ஊழியர்களுக்கும் இடையில் நடந்த தகராறின் காரணமாக போலீசார், 22 ஆம் தேதி அந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது; 23 ஆம் தேதி போலீஸ் அதிகாரிகள் சென்று மாணவர்களை அவர்களுடைய கல்லூரிக்குள்ளே நுழைந்து அடித்து 9 மாணவர்களுக்கு மிகப் பயங்கரமான காயங்கள் ஏற்பட்டு அவர்கள் எல்லாம் ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது.

முற்பகல் 11–20

அதுமட்டுமல்லாமல் அந்த மாணவர்கள் மீது 307 செக்சனில் வழக்குகள் வேறு தொடரப்பட்டிருக்கிறது. இது எல்லாம் மாணவர்கள் மீது தவறா, போலீஸ் மீது தவறா அல்லது எம்.பி.டி.சி. பஸ் ஊழியர்கள் மீது தவறா என்கிற நிலைமைகளை எல்லாம் ஆராய்வதை விட மாணவர்கள் என்பவர்கள் ஒரு வர்க்க ரீதியானவர்கள் அல்ல என்பதையும் நாம் உணர வேண்டும். ''கடிதோச்சி மெல்ல எறிக'' என்ற திருவள்ளுவர் வாக்குப்படி மாணவர்கள் ஒரு வேளை தவறு செய்திருந்தால் கூட அவர்களை மிகப் பக்குவமாக அணைத்துச் செல்கின்ற ஒரு முறையை இதிலே பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, தயவுசெய்து மாணவர்கள் மீது போட்டிருக்கின்ற 307 செக்சன், அதைப்போன்ற வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்று, மாணவர்களிடையேயும், போலீஸ் அதிகாரிகளிடையேயும், எம். பி. டி. சி. ஊழியர்களிடையேயும் ஒரு சுமுகமான நிலையை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய அரசை கேட்டுக்கொண்டு நான் முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

4. சில பத்திரிக்கையாளர்கள் அவையைப் புறக்கணிக்கப் போவதாக வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு 4 கட்சிகளின் சார்பிலேயும் ஒரு கருத்தை குறிப்பிட விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இல்லை, உங்கள் சார்பிலே என்று சொல்லுங்கள். தாங்கள் மட்டுமே, ஓரே கரு உறுப்பினர் இருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே தான் நீங்கள் இதைச் சொல்ல முடியுமே தவிர, மற்றக் கட்சிகள் சார்பில் எழுப்ப முடியாது. (குறுக்கீடு) பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வராது.

திரு. ச. இராமச்சந்திரன்; ஒரு வேண்டுகோள் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்

திரு. எஸ், ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 கட்சிகளின் சார்பிலே நான் ஒரு பிரச்சினையை எழுப்புகிறேன், என்று சொன்னால் 4 கட்சிகளும் ஒன்றாக இணைந்து நாங்கள் இந்த சட்டசபையிலே இயங்கப்போகிறோம் என்று உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கவேண்டும். அப்போது தான் 4 கட்சிகள் சார்பில் 5 கட்சிகள் சார்பில் அல்லது 2 கட்சிகள் சார்பில் ஒரு உறுப்பினர் பேசமுடியும். உறுப்பினர் எந்த கட்சியைச் சார்ந்திருக்கிறாரோ அந்த கட்சியின் சார்பிலேதான் பிரச்சினையை எழுப்ப முடியுமே தவிர மற்ற கட்சிகளின் சார்பிலே சேர்ந்து எழுப்புவதாக இருந்தால் அவர்கள் ஓர் அணியாக ஒன்று சேர்ந்து உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருக்க வேண்டும், நேற்றைய தினம் கூட நண்பர் 4 கட்சிகளின் சார்பில் என்று தெரிவித்து விட்டு வெளிநடப்புச் செய்தார்.